# தேசியம்

THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 33 | 01.01.2023 (ஞாயிற்றுக்கிழமை) | மார்கழி மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00




# கூட்டமைப்பு முன்வைக்கும் தீர்வை எந்த தமிழர்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்!

## சர்வகட்சிக் கூட்டம் எப்போது?

### இந்த வாரம் அறிவிப்பு!



பக்கம் 5

அடுத்த சர்வகட்சிக் கூட்டம் எப்போது இனி இடம்பெறும் என்பது தொடர்பில், இந்த வாரம் கட்சித் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தெரியவருகின்றது. இதேவேளை, தமிழர் தரப்பு விடயங்கள் தொடர்பாகத் தமிழ்க்

## புதுவருட தினத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் போராட்டம்



பக்கம் 5

புதுவருடதினத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா, ஏ9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக 2142 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தாய்மாரால் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் அவர்களது போராட்ட கொட்டகைக்கு முன்பாக இடம்பெற்றது.

இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட மற்றும் வெள்ளைவானில் கடத்தப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி தேவை என்பதோடு அவர்களை விடுவிக்க வேண்டும் எனவும் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இறையாண்மையுடனான தீர்வே

## விடுதலைப்புலிகளின் மீளுருவாக்கம் போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கிறதா!

## சிவாஜிலிங்கம் கேள்வி



பக்கம் 5

தியாகி திலீபனின் நினைவுதினத்தை முன்னிட்டு நீதிமன்ற தடையை மீறி தீலிபனின் நினைவுதினத்தை அனுஸ்டித்த குற்றச்சாட்டின் கீழ் எம்.கே.சிவாஜிலிங்கம் உரும்பிராய் பகுதியில் வைத்து 2020 செப்டம்பர் 15 ம் திகதி கைது

# ஜனாதிபதியுடனான பேச்சை தமிழ்தேசிய கட்சிகள் புறக்கணிக்க வேண்டும்! தரவை மாவீரர் இல்ல ஏற்பாட்டுகுழு




பக்கம் 5

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லப் பகுதியை இராணுவ புலனாய்வு பிரிவு இராணுவம் ஒட்டுக்குழுக்கள் சூறையாடும் ஈனச்செயல் நடந்து கொண்டி ருக்கின்றது. எனவே தமிழ்தேசிய கட்சிகள் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு தீர்வு கிடைத்தால் தான் பேச்சுவார்த்க்கு வருவோம் என ஜனாதிபதியிடம் தெரிவித்து பேச்சுவார்த்தையை புறக்கணிக்வேண்டும் என தரவை மாவீரர் இல்ல ஏற்பாட்டுகுழு தலைவர் லவக்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக மையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (1) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 30 திகதி மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லப் பகுதியில் 500 க்கு மேற்பட்ட குழிகளை வெட்டி மரக்கன்றுகளை நாட்டுவதாகவும் அதனை வனவள திணைக்களத்தினால் செய்யப்படுவதாக மாவீரர் எற்பாட்டுக குழுவான எனக்கும் நிதர்ஷன் ஆகியோருக்கு தொலைபேசி ஊடாக தெரிவிக்கப்பட்டது

உடனடியாக வனவள திணைக்கள காரியாயத்திற்கு சென்றபோது

## தமிழர்களுடைய நிர்வாகத் திறனை யாழ். அரசாங்க அதிபர் பதவி

### வெளிப்படுத்துகிறது - அரச அதிபர் பிரதீபன்!



யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து பதவி உயர்வு பற்றிய செல்லும் கணபதிப்பிள்ளை மகேசன் தமிழர்களுடைய நிர்வாகத்திறனின் அடையாளமாகவும் யாழ் மாவட்டத்தின் அடையாளமாகவும் விளங்குகிறார் என யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனின் பிரிவு உபசார நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பக்கம் 5

## எந்தவொரு தரப்புக்கும் பாதகம் இல்லாத அரசு தீர்வு

### அதுவே தனது இலக்கு என்கிறார் ரணில்!

பக்கம் 5

## தீர்வை வழங்குவது அரசின் கடப்பாடு - சம்பந்தன்

பக்கம் 5

தேசியம் THESIYAM www.thesiyamnews.com
ஆசிரியர் பீடம்
இல.527, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

# ஜனாதிபதி ரணிலின் பேச்சு வார்த்தை என்பது வெறும் நாடகம் மட்டுமே.



மக்கள் எந்தவொரு பிரச்சினைக்கும் முகங்கொடாது தட்டிக் கழிக்க விரும்பினால் ஒரு விசாரணைக் குழுவையோ பாராளுமன்றத் தெரிவுக்குழுவையோ அமைத்து, சர்வகட்சி மாநாட்டையோ ஒரு வட்ட மேசை மாநாட்டையோ நடத்தி அதனை முடிவில்லாமல் இழுத்தடிப்பது ஆட்சியாளர்களின் அரசியற் பாரம்பரியமாக இருக்கின்றது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் பல்வேறு தளங்களில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துநிற்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் நெருக்கடிகளிலிருந்து தன்னைத் தற்காலிகமாக விடுவித்துக்கொள்வதற்காக அதே நாடகத்தை தொடங்கி இருக்கின்றார்.

ஜனாதிபதி தேர்தல் ஒன்றை சந்தித்து அவர் மீண்டும் ஜனாதிபதியாகும் வரை இந்த நாடகம் தொடரும்.

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிப்பதாக ஆளும்கட்சி நடிப்பதும், எதிர்க்கட்சி எதிர்ப்பதும், பின்பு எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறி மீண்டும் அதே முயற்சியும் அதே எதிர்ப்புமாக ஒரே பாணி நாடகம் தொடர்பில் தமிழர்களுக்கு நீண்ட அனுபவம் இருக்கின்றது.

திருமதி. சந்திரிகா அவர்கள் முன்வைத்த அரை சமஸ்டி ( சமஸ்டி அல்ல) தீர்வு திட்டத்தை திரு.ரணில் விக்ரமசிங்கே தீயிட்டு எரித்தார்

பின்னர் திரு.ரணில் விகாரமசிங்கே பிரதமராகி தீர்வு முன்வைப்பதாக சொன்ன போது திருமதி சந்திரிக்கா திரு ரணில் விக்ரமசிங்கே அவர்களின் அரசாங்கத்தை கலைத்தார்

திரு மஹிந்த ராஜபக்சே 13 பிளஸ் என கதை விட்ட போது திரு.ரணில் விக்ரமசிங்கே தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அதை எதிர்த்தது.

பின்னர் நல்லாட்சியில் முன்வைக்கப்பட்ட ஒற்றையாட்சி இடைக்கால அறிக்கையை ராஜபக்சே குடம்பம் எதிர்த்தது.

இப்போது திரு.ரணில் விக்ரமசிங்கே ஜனாதிபதியாகி தமிழ் பிரச்சனைக்ளுக்கு தீர்வு கொடுப்பதாக நடிக்கும் போது எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் திரு. சஜித் பிரேமதாசா ஒற்றையாட்சிக்குள் மட்டுமே அதிகாரப்பகிர்வு சாத்தியம் என்கிறார்.

தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகள் வாக்களித்த திரு. டலஸ் அழகப்பெரும அவர்கள் ஒற்றையாட்சியை தாண்ட முடியாது என்கிறார்

நாங்கள் ஜனாதிபதியாக வாக்களித்த திரு மைத்திரிபால சிறிசேனா மாவட்ட சபையை தான் சரி என்கிறார்.

ராஜபக்சே குடும்பமும் ஒற்றையாட்சியை விட்டு கொடுக்க முடியாது என்கின்றது.

சம நேரத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் நடத்துமாறு கோரும் நிலைமைக்கு தமிழர தரப்பு மோசமடைந்து இருக்கின்றது .

இந்த நிலையில் தீர்வு முயற்சியில் மற்றுமொரு ஏமாற்றத்திற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

# சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளரை பாராட்டி கௌரவிப்பு!



கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளராக கடமையாற்றிய வி.திவாகர சர்மா தனது அரச சேவையிலிருந்து நேற்றைய தினம் (31) ஓய்வுபெறவுள்ளதையடுத்து அவரின் சேவைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் தலைமையில் இடம்பெற்றது.

அமைச்சின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந்த கௌரவிப்பு நிகழ்வில் அமைச்சின் கணக்காளர் எஸ்.சட்குணேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், நிருவாக உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீவாணி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (திருமதி) எஸ்.விஜயகுமார் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டு அவரின் சேவைகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்களையும் வழங்கி கௌரவித்தனர்.

# அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை குறைக்க வவுனியாவில் விசேட நடவடிக்கை!





அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை குறைக்கும் முகமாக வவுனியா பொலிசாரினால் வாகனங்களுக்கு விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

விபத்துக்களை குறைக்கும் முகமாக வவுனியா பொலிசாரினால் விழிப்புணர்வூட்டல், வீதிக் குறியீடுகளை மறுசீரமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதன் ஒரு கட்டமாக கனரக வாகனங்கள், பாரவூர்திகள் மற்றும் துவிச்சக்கர வண்டி போன்றவற்றிற்கு மின்னொளி ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுபத் கல கமகே அவர்களின் திட்டமிடலில் சீன அரச கூட்டுத்தாபனத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இந் நிகழ்வின் போது வீதியால் சென்ற அனைத்து வாகனங்களும் வழிமறிக்கப்பட்டு அவற்றுக்கு இவ் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டது.

வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன்பாக இடம்பெற்ற இவ் நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள், சீன அரச கூட்டுத்தாபனத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் நலன்புரி நிதியம் அங்குரார்ப்பணம்!



சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் நலன்புரி நிதியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று (சனிக்கிழமை சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ப.கேசவதாசன் அவர்களது தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.இ. விஜயமோகனராசா கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை க.பொ.த.உயர்தரப் பரீட்சை போன்ற பரீட்சைகளில் சித்தி எய்திய கூட்டுறவு பணியாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு...
+94 76 567 3339

# நகரசபை உறுப்பினரின் பங்களிப்பில் உயர்தர மாணவர்களுக்கு கருத்தமர்வு!



சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் வீ.வியஜேந்திரனின் நிதிப் பங்களிப்புடன் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஒழுங்கமைப்பில் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தொடர் கருத்தமர்வு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நகரசபை உறுப்பினரின் இரண்டு இலட்சத்து 11ஆயிரம் ரூபாய் நிதிப் பங்களிப்பில் குறித்த கல்வி ஊக்குவிப்புத் திட்டம் தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் போதைப்பொருள் தொடர்பான பிரதான கலந்துரையாடல்!





பாடசாலைகளில் மாணவர் மத்தியில் போதைவஸ்து பாவனை அதிகரித்து வருவதையொட்டி மாகாண கல்வித் திணைக்களம் கலந்துரையாடலொன்றை நேற்று நடாத்தியது.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

அங்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் பிரதான அதிதியாக கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க சிறப்பதிதியாக கலந்துகொண்டார்.

மாணவர் மத்தியிலே போதைவஸ்து பாவனையை முற்றாக ஒழிக்குமுகமாக அங்கு கலந்து இடம்பெற்றதுடன் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த வருடம் பாடசாலையிலே அந்தத் திட்டங்களை அமல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# முதல் முதல் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை தேவராஜா 37 வது நினைவேந்தல்!



இலங்கையில் முதல் முதல கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை தேவராஜா அவர்களின் 37வது நினைவேந்தல் நிகழ்வு இன்றைய தினம் அம்பாறை ஆலயடிவேம்பு இந்து மாமன்ற மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை (31) அம்பாறை தமிழ் ஊடகவியாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

அம்பாறை தமிழ் ஊடகவியாளர் ஒன்றியத்தின் தலைவர் க.சரவணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஊடகவியலாளர் தேவராஜாவின் சகோதரர் அக்கரைப்பாக்கியன் உள்ளிட்ட குடும்ப உறவுகள், ஊடகவியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மறைந்த ஊடகவியாளர் கணபதிப்பிள்ளை தேவராஜா திருவுருவப் படத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சகோதரரினால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு, வருகை தந்தோர் அனைவராலும் சுடரேற்றி, மலர்தூவி, 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

அக்கரைப்பற்று பிராந்திய செய்தியாளராக கடமையாற்றிய கணவதிப்பிள்ளை தேவராஜா கடந்த 1985 ம் ஆண்டு டிசம்பர் 25 ம் திகதி இராணுவ சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்டு அம்பாறை கொண்டை வெட்டுவான் இராணுவ முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்ட முதல் ஊடகவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது,





### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மரியாதை நிமிர்த்தம் சந்தித்தார்

# யாழ் மாவட்ட கட்டளை தளபதி!



யாழ் மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ணா போதோட்ட, மரியாதை நிமிர்த்தம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், அண்மைக்காலமாக அதிகரித்துள்ள மாட்டுத் திருட்டு, போதைப் பொருள் பாவனை, வாள் வெட்டு உட்பட்ட சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மேலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற காணிகளை விடுவித்தல் மற்றும் பாடசாலை மைதானம் போன்ற பொது இடங்களை புனரமைப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் இச்சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

# கடலட்டை பண்ணை தொடர்பில், சட்டவிதிப்படி உரிய தீர்வு வழங்குங்கள்!

## அன்னராசா வேண்டுகோள்!

கடலட்டை தொடர்பான பிரச்சினை ஏற்படுமென ஏற்கனவே நான் கூறியிருந்தேன் அது நேற்று முன்தினம் இடம்பெற்று ள்ளது. நாங்கள் கடலட்டை பண் ணை வழங்குவதை மறுக்கவில்லை. முறையாக சட்ட விதிப்படி உரிய பயனாளிகளுக்கு வழங்குங்கள் என் பதே எமது நிலை. நேற்றைய, போராட்டமல்ல எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும் எமது மக்களுக்காக என்றும் தொடர்ந்து குரல் கொடுப்போம். கடலட்டை பண்ணை கடந்த மாதம் அனலை தீவுக்கு விஜயம் மேற் கொண்ட போது பருத்தித்தீவில் சட்ட விரோதமாக இருக்கும் பண்ணைகளை அகற்றுமாறு அனலைதீவு மக்கள் கடற்தொழில் அமைச்சரிடம் கோரிக்கை வைத்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற் கொள்ளப் படவில்லை.

இது போல சட்ட விரோத பண்ணைகளை தான் நாங்கள் இயன்றளவு எதர்க்கின்றோம். பருத்தித் தீவில் இன்றளவும் சட்டவிரோதப்பண்ணைகள் காணப்படுகின்றது. குறித்த பிரதேச சங்கங்கள் , பிரதேச செயலர் போன்றோர் சட்டவிரோதம் என கூறிய போதும் இது வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

பருத்தித்தீவில் சட்டவிரோதமாக காணப்படும் 90 ஏக்கர் தொடர்பில் முறையான விளக்கமளிக்கப்பட வேண்டும். இப்பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாத தருணத்தில் தேசிய தைப்பெங்கல் விழாவிற்கு ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தரும் வேளையில் அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்றையும் ஏற்பாடு செய்யும் எண்ணமுள்ளதாகத் தெரிவித்தார்.

# வவுனியாவில் புதுவருடத்தை வரவேற்று

## கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட வழிபாடுகள்!

வவுனியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் ஆங்கில புதுவருடத்தை வரவேற்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

அந்தவகையில் வவுனியா, குடியிருப்பு தூய ஆவியானவர் ஆலயத்தில் ஆலய குரு யேசுவா கிறிஸ்வஸ் தலைமையில் காலை விசேட திருப்பலி பூஜைகள் இடம்பெற்று, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புதுவருடத்தை வரவேற்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்த மக்கள் புதுவருட வாழ்த்துக்களைப் பரிமாறி கொண்டதுடன், இவ் வருடம் சிறப்பாக அமைய வேண்டி வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதேபோன்று வவுனியாவில் அமைந்துள்ள ஏனைய கிறிஸ்தவ ஆலயங்களிலும் நள்ளிரவு ஆராதனைகள் நிறுத்தப்பட்டு புதுவருடத்தை வரவேற்று அமைதியான முறையில் காலையில் சிறப்பாக வழிபாடுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு மாகாணத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக புவனேந்திரன் நியமனம்!



கல்முனை வலய கல்வி பணிப்பாளராக இருந்த செல்லத்துரை புவனேந்திரன் கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிருவாக சேவை தரம்1 அதிகாரியான செல்லத்துரை புவனேந்திரனுக்கான நியமனக்கடிதம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டுள்ளது.

காரைதீவைச்சேர்ந்த இவர்,2009.09.09 இல் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியில் ஆசிரிய நியமனம்பெற்றதுடன் கல்விச்சேவையில் இணைந்துகொண்டார்.

அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்புக்கு 2021.03.23 முதல் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் 2009 இல் இலங்கை கல்வி நிருவாக சேவையில் இணைந்து கல்முனை கல்வி வலயத்தில் கடமையாற்றிய பின்னர் ,2010 முதல் 2018 வரை சம்மாந்துறை கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்தி திட்டமிடல் நிர்வாகம் போன்ற பிரிவுகளில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி, 2019 இல் மீண்டும் கல்முனை வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று 2020.04.16 முதல் கல்முனை கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்தார் .

இவர் ஆரம்பக்கல்வியை காரைதீவு இ.கி.மிசன் ஆண்கள் பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை விபுலாநந்த மத்தியகல்லூரியிலும், கல்முனை பற்றிமா தேசிய கல்லூரியிலும் பயின்று, கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப்பட்டதாரியாகி ,பிரான்சில் தனது கல்வித்திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தில் முதுநிலைமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவர் நாளை மறுதினம் (4) புதன் கிழமை திருகோணமலை கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தில் கடமையை பொறுப்பேற்கவிருக்கிறார்.

# உயிரிழந்த நண்பனுக்காக நண்பர்கள்

## செய்த நெகிழ்ச்சியான செயல்பாடு!

கடந்த வருட புத்தாண்டு தினமான 1.1.2022 அன்று வவுனியா தாண்டிக்குளம் ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்வராசா ரஜீவன் (37) என்பவரின் ஓராண்டு நினைவேந்தலை முன்னிட்டு அவரது நண்பர்கள் இன்றைய தினம் விபத்து ஏற்பட்ட இடத்தில் ஒன்று கூடி உயிரழந்தவரின் திருவுருவ படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி அஞ்சலி நிகழ்வு ஒன்றை அனுஷ்டித்திருந்தனர்.

மேலும் குறித்த பகுதியில் நிழல் தரும் மரங்கள் சிலவற்றையும் நாட்டியிருந்ததுடன் உயிரழந்த நண்பன் சார்பாக வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள குடும்பம் ஒன்றிற்கு பெறுமதியான உலர்உணவு பொதியையும் வழங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் மோட்டர் சைக்கிள் தீயில் எரிந்து நாசம்:

## திருத்தும் நிலையம் மீது ஏற்பட்ட தீப்பரம்பல் கட்டுக்குள்!



வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் திடீரென தீப்பற்றிய மோட்டர் சைக்கிள் ஒன்று முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், மோட்டர் சைக்கிள் திருத்தும் நிலையம் மீது ஏற்பட்ட தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.


புதுவருட தினமான இன்று (01.01) இடம்பெற்ற இவ் அனர்த்தம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பிளசர் ரக மோட்டர் சைக்கிள் ஒன்று இயங்கவில்லை எனத் தெரிவித்து வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள மோட்டர் சைக்கிள் திருத்துமிடம் ஒன்றின் முன்பாக குறித்த மோட்டர் சைக்கிளை நிறுத்தி அதனை இயங்க செய்த போது அம் மோட்டர் சைக்கிள் திடீரென தீ பிடித்து எரிந்துள்ளது.

இதன்போது தீ பிடித்த மோட்டர் சைக்கிளில் இருந்து மோட்டர் சைக்கிள் திருத்தும் நிலையத்திற்கும் தீப் பிடித்த நிலையில் அங்கு நின்றவர்கள் அதனை கட்டுப்படுத்தியதுடன், தீப்பிடித்த மோட்டர் சைக்கிளை வீதியில் இழுத்துப் போட்டனர். அத்துடன் அங்கு நின்றவர்கள், வீதியால் சென்றவர்கள் இணைந்து நீர் ஊற்றியும், மண் போட்டும் மோட்டர் சைக்கிள் மீதான தீயை கட்டுப்படுத்த முயன்ற போதும் அது பயனளிக்கவில்லை. மோட்டர் சைக்கிள் முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

# ஆங்கில புதுவருடத்தை முன்னிட்டு வவுனியாவில்

## இந்து ஆலயங்களிலும் விசேட வழிபாடுகள்!



ஆங்கில புதுவருடத்தை முன்னிட்டு வவுனியாவில் அமைந்துள்ள இந்து ஆலயங்களிலும் இன்று காலை விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. அந்தவகையில் வவுனியா, வைரவ புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் ஆலயத்தின் பிரதம குருக்கள் மயூரசர்மா குருக்கள் தலைமையில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன்போது ஆலயத்திற்கு வருகை தந்த பலரும் புதிய ஆண்டு சிறப்பாக அமைய வேண்டி இறைவனை வழிபட்டதுடன், தமக்குள் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

# புத்தாண்டு சிறப்பு பூஜையும் திருவெம்பாவை பூஜையும்!



வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் புத்தாண்டு சிறப்பு பூஜையும், திருவெம்பாவைப் பூஜையும் இன்று (1) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெற்ற போது..

# ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட முதலாவது ஊடகவியலாளர் படுகொலையான கணவதிப்பிள்ளை தேவராஜாவின் படுகொலை : கலையரசன் எம்.பி



இந்த நாட்டிலே 37 ஆண்டுகளுக்கு முன்பதாக பேனா முனை போராளியாக இருந்து இந்த நாட்டிலே இருந்த அடக்குமுறைகள் எல்லாம் வெளிக் கொண்டு வந்ததன் காரணமாக ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட முதலாவது ஊடகவியலாளர் படுகொலையாக கணவதிப்பிள்ளை தேவராஜாவின் படுகொலையை பார்க்கின்றதுடன் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு ஒரு நிலையான தீர்வு கிடைக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர் க.சரவணன் ஏற்பாட்டில் முதலாவதாக படுகொலை செய்யப்பட்ட க.தேவராஜாவின் 37 வது நினைவேந்தல் ஆலையடிவேம்பு இந்து மாமன்ற மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை (31) இடம்ற்றது இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எங்களுடைய தமிழ் மக்கள் தொடர்ச்சியாக இந்த நாட்டு அரசாங்க அரசபடைகள் தொடர்ச்சியாக துன்புறத்தல் அடக்கு முறைக்கு எதிராக கூடுதலாக எமது ஊடகவியலாளர்களே வெளியிக் கெண்டுவரும் சக்திகளாக இருந்திருக்கின்றனர். அது அரசுக்கு பெரும் சவாலாக இருந்திருக்கின்றது அவர்கள் பொய் உரைக்கின்ற உண்மையை மறுதலிக்கின்ற செயற்பாடுகளை முன்னெடுத்த செயற்பாடுகள் காரணமாக இதை வெளியில் கொண்டுவருபவர்கள் ஊடகவியலாளர்கள் காரணமாக அவருக்கு மரணதண்டனையை அவர்கள் வழங்கியிருந்தார்கள்.

குறிப்பாக இந்த நாட்டிலே 44 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர் அதில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 பேர் அதில் சுகிர்தராஜன், நடேசன், சிவராம், இரத்தினசிங்கம், இவ்வாறு பட்டியல் இட்டுச் செல்லலாம் இவ்வாறு பொரும்பாலன ஊடகவியலாள்கள் படுகொலை செய்யபப்பட்டுள்ளனர்.

இன்று எவ்வாறான தமிழருக்குரிய போராட்டங்களை முன்னெடுத்துள்ளானாலும் பெரும்பான்மை சமூகத்தினால் எமது சமூகத்துக்குரிய தீர்வு கிடைக்கவில்லை என்பதுதான் எமது மனஆதங்கம்.

இந்த நாடு தொடர்ச்சியாக வன்முறை நிறைந்த நாடாகவே இருந்து கொண்டிருக்கின்றது உலகத்திலே ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்காக பல திட்டங்கள் நடைமுறைகளை அமைப்புக்கள் கையாண்டாலும் இலங்கையில் அது விதிவிலக்காக இருக்கின்றது.

ஊடகவியலாள்கள் அவர்களது உயிரை துர்ச்சமாக மதித்து உண்மைக்கு உண்மையான சம்பவங்களை மிகவும் கட்சிதமாக வெளிக் கொண்டு வந்தனர் அதன் காரணமாக இந்த மண்ணை நேசித்த மண்ணுக்கு உரித்தான கணவதிப்பிள்ளை தேவராஜா முதலாவதாக படுகொலை செய்யபபட்டவர் அவர் தமிழன் என்ற காரணத்தால்

அம்பாறை தமிழ் ஊடகவியலாள் ஒன்றியம் இவரின் நினைவேந்தலை பல தடவைகள் செய்துள்ளது என்பதுடன் இப்போது சாதாரண சூழல் இருப்தால் நாங்கள் வாழ்ந்துவிடலாம் என்பதை விடுத்து இந்த தேவராஜான் கொலை செய்யப்பட்டார் அதற்கு என்ன காரணம் என்றதை இளம் சமூதாயம் அறியவேண்டும்.

இப்போது எமது சமூகம் எதை செய்யவேண்டும் என்றது தெரியாத நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது எனவே நாங்கள் நாங்களாகவே எமது சமூகத்தின் எதிர்கால இருப்பு சம்மந்தமாக ஒன்றுபட்டுச் செயற்படவேண்டிய காலம் இது ஏன் என்றால் இப்போது இனப்பிரச்சனைக்கு அப்பால் பொருளாதார பிரச்சனை மேலோங்கி ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் பொருளாதார பிரச்சனையைதான் பேசுகின்றனர்.

இந்த பொருளாதார பிரச்சனைக்கு அடித்தளமாக இருந்தது இந்த நாட்டிலே இருக்கின்ற இன ரீதியான பிரச்சனை என்பதை மறந்துவிடுகின்றனர் என்றார்.

## திலீபனை நினைவு கூர்ந்த விவகாரம்: கொழும்பில் சிவாஜிக்கு எதிராக வழக்கு!



தியாகதீபம் திலீபனை நினைவு கூர்ந்தமை தொடர்பான வழக்கிற்காக எம்.கே. சிவாஜிலிங்கத்தை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் அவரது வீட்டிற்குச் சென்ற வல்வெட்டித்துறை பொலிஸார் எதிர்வரும் 11 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்ற நீதிமன்ற கட்டளையை வழங்கியுள்ளனர்.

நீதிமன்ற தடையை மீறி தியாகதீபம் திலீபனை நினைவு கூர்ந்தமைக்காக கடந்த 2020 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 15 ஆம் திகதி எம்.கே. சிவாஜிலிங்கம் கைது செய்யப்பட்டிருந்தார்.

கோண்டாவிலில் வைத்து கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்ற எக்காரிகையை அடுத்து 2 இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கலாம் என எம்.கே. சிவாஜிலிங்கம் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

## 26 வயது இளைஞன் கத்தியால் குத்தி படுகொலை : தமிழர் பகுதியில் இன்று காலை நடந்த கொடூரச் சம்பவம்!




கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் கிராமத்தில் 26 வயது இளைஞன் ஒருவன் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் இன்று (01) அதிகாலை 4 மணியளவில் வீடு புகுந்த நபர்கள் 26 வயதுடைய தவக்குமார் சுரேஸ் என்ற இளைஞனை கத்தியால் குத்தியும், பலமாக தாக்கியுமுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் அயலவர்கள் மற்றும் உறவினர்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் வழியிலேயே உயிரிழந்தள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் சமூகத்தின் வகிபாகம்!



சமூக நடவடிக்கைகள், துறைசார் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கான மையம் ஏற்பாடு செய்த "இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் சமூகத்தின் வகிபாகம்" தொடர்பிலான கலந்துரையாடல் ஆராய்ச்சிக்கான மையத்தின் தலைவர் அதிபர் எம்.ஜே.எம் அன்வர் நௌசாத் தலைமையில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் இன்று இடம்பெற்றது.

YMMA இந் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் அதிபர் எம்.ஐ.எம். றியாஸின் ஆரம்ப உரையுடன் ஆரம்பித்த இந்த கலந்துரையாடலில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாச்சார பீடத்தின் அரசியல் விஞ்ஞான துறைத்தலைவர் பேராசிரியர் எம்.ஏ.எம். பௌசர், கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் எம்.ஐ. சதாத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் இன முரண்பாடுகளில் முஸ்லிம் தலைவர்கள் நடந்து கொண்ட விதங்கள், கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகம் தவறவிட்ட தீர்வுகள், முஸ்லிம் அரசியலின் போக்குகள், அரசியல் தலைவர்களின் நடவடிக்கைகளில் சமூகம் அடைந்த இலாப நட்டங்கள், இன ஒற்றுமை, சமஷ்டி, அரசியல் தீர்வில் முஸ்லிங்கள் எதிர்பார்ப்பது போன்ற பல விடயங்களை தனது கருத்துரைகளில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதி செயலாளர் நாயகமும், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், கிழக்கின் கேடயம் பிரதானியும், அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவருமான அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம். சபீஸ், அல்– மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளரும், என்.டி.பி.எச்.ஆர். இந்த தேசிய கொள்கைப்பரப்பு செயலாளருமான யூ.எல்.என். ஹுதா, நாம் ஊடகர் பேரவையின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான யூ.எல். மப்ரூக் ஆகியோர் விளக்கினர்.

இந்த கலந்துரையாடலில் அட்டாளைச்சேனை பிரதேச சபை உப தவிசாளர் சட்டமானி எஸ்.எம். எம். ஹனீபா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர், ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம்.சி.புஹாரி, அட்டாளைச்சேனை அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைதீன், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் யு.எம். வாஹீட், அரச சார்பற்ற நிறுவனங்களின் தவிசாளர் எஸ்.எம். லாபீர், என்.டி.பி.எச்.ஆர். இந் உச்ச பீட உறுப்பினர் எம்.என்.எம். அப்ராஸ், அம்பாறை மாவட்ட இளைஞர் சம்மேளன தலைவர் எம்.எம். ருக்ஸான், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், பாடசாலை அதிபர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், ஊடக அமைப்புகளின் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.






## கூட்டமைப்பு முன்வைக்கும்...

பாதிக்கப்பட்டோருக்கு தேவை என தெரிவித்து மாதிரி வாக்களிப்பையும் மேற்கொண்டிருந்தனர்.
இதன்போது கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்,
காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்கள் உட்பட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட தீர்வை மட்டும் தான் தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் தீர்வை எந்தத் தமிழர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.
காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்கள் உட்பட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட தீர்வை மட்டும் தான் தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள். அரசியல் தீர்வை எவ்வாறு காண்பது? தெற்கு சூடான், எரித்திரியா, கொசோவா, கிழக்கு திமோர் ஆகிய நாடுகளில் கடந்த காலங்களில் நடந்த ஐ.நா.வின் கண்காணிப்பு வாக்கெடுபே ஒன்றே சிறந்த வழி.
நோர்வே தூதர் எரிக் சொல்கைம், ஒரு மத்தியஸ்த பாத்திரத்தை வகிக்க விரும்புவதை இப்போது நாம் காண்கிறோம். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் மத்தியஸ்தராக மீண்டும் வரவதற்கு இரகசியமாக செயற்பட்டு வருகின்றார். நாங்கள் அதை எதிர்க்கவில்லை. ஆனால் மேற்கு தேச அரசியல் கட்டமைப்பை மேசைக்கு கொண்டு வர விரும்புகிறோம்.
ஐ.நா கண்காணிக்கும் வாக்கெடுப்பை நடத்துவதற்கு, எங்களிடம் 3 சாத்தியமான அரசியல் தீர்வுகள் உள்ளன: 1. தமிழர் இறையாண்மை, 2. மேற்கத்திய பாணி ஜனநாயகம், 3. ரணில்–சம்பந்தன் ஒப்பந்தத்தில் இருந்து தீர்வு இதைத்தான் எங்கள் பதாகையில் எழுதியுள்ளோம்.
முழு உலகமும், குறிப்பாக இலங்கை கண்காணிப்பு குழுக்கள் மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் பெரும் பங்கை ஐ.நா கண்காணிக்கும் வாக்கெடுப்புக்கு நடத்த பங்கு வகிக்கும் என நம்புகிறோம்.
புலம்பெயர் தமிழ் மக்கள் எமது தமிழ் இறையாண்மை மிக்க தேசத்தில் முதலீடு செய்து அபிவிருத்தி செய்ய ஆவலுடன் காத்திருக்கின்றமையால், அரசியல் தீர்வு விடயத்தில் எமது நேரத்தை வீணடிக்க நாம் விரும்பவில்லை.

## சர்வகட்சி கூட்டம் எப்போது...

கட்சிகளின் தலைவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரத்தியேகமாகச் சந்திப்பார் என்றும் அறிய முடிகின்றது.
அவை ஜனாதிபதியின் தனிப்பட்ட சந்திப்பாக இருக்கும் என்றும் தெரியவருகின்றது.
இந்தச் சந்திப்புக்களில் துறைசார் அமைச்சர்கள், பொறுப்பான அதிகாரிகள் கலந்துகொள்வார்கள் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றும் அறிய முடிகின்றது.

## விடுதலைப்புலிகளின் மீளு...

செய்யப்பட்டார். நீதிமன்ற தடை உத்தரவை மீறியமை மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் உறுப்பினரை நினைவு கூர்ந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட எம்.கே.சிவாஜிலிங்கத்தை நீதிமன்றம் எச்சரித்து 2 இலட்சம் ரூபாய் கொண்ட சரீரப் பிணையில் விடுவித்திருந்தது.
பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்தாலும் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை என எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.
வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தீலிபனின் நினைவுதினத்தை அனுஸ்டித்தமை தொடர்பாக கைது செய்து 24 மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தை வழக்கில் புகுத்தக் கூடிய வகையிலே பொலிஸார் முயற்சிகள் எடுத்ததை நான் அறிந்தேன்.
பின்னர் சாதாரண சட்டத்தின் கீழ் நான் முன்னிலைப்படுத்தப்பட்டேன். எது எப்படி இருந்தாலும் கடந்த ஆண்டு நடைபெற்ற விசாரணையின் போது பயங்கரவாத சட்டத்தின் கீழ் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்ய யோசித்து இருக்கின்றோம்.
சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இதன் கோவை அனுப்பப்பட்டு இருக்கின்றது என யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர்.
அந்த அடிப்படையில் நேற்றைய தினம் எனது வீட்டிற்கு வந்த பொலிஸார் எனக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிமன்ற கட்டளையை வழங்கிச் சென்றனர்.
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செயலுக்காக யாழ்ப்பாணத்தில் உயர்நீதிமன்றம் இருக்கத்தக்கதாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நோக்கம் என்ன? பயங்கரவாதவாத தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்தார்களா அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒத்ததாக விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் போன்ற குற்றச்சாட்டுகளை சுமத்தப்பட்டிருக்கிறதா என்பது குற்றப்பத்திரிகை வழங்கிய பின்னரே தெரியும்.
பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என கூறப்படும் போது இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

## ஜனாதிபதியுடனான பேச்...

அதனை நாங்கள் வெட்டவில்லை என்றனர். இதனையடுத்து நாங்கள் அங்கு உடனடியாக சென்றபோது இராணுவ புலனாய்வுபிரிவினரும் ஒட்டுக் குழுக்களும் மற்றும் பிள்ளையான் கடசியில் செயற்பாட்டில் இயங்குகின்ற கூளாவடியைச் சோந்தவர் இணைந்து இந்த குழிகளை வெட்டிக் கொண்டிருந்தனர். நாங்கள் அதனை தடுத்து நிறுத்தினோம் அதன் பின்னர் 30 திகதி இரவு மீண்டும் குழிகள் வெட்டப்பட்டு மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளது.
தரவை மாவீரர் துயிலும் இல்லம் மிகவும் முக்கியமானது இந்த இடத்தில் இவ்வாறான ஈனச்செயல்களை கடந்த காலங்களிலே செய்து கொண்டுவந்தார்கள் அப்போது இதனை யார் செய்து கொண்டு வந்தார்கள் என்ற அறியமுடியாத சூழல் இருந்தது ஆனால் இப்போது வெளிப்படையாக அப்பட்டமாக தெரியவந்துள்ளது இராணுவபுலனாய்வும், இராணுவமும் ஒட்டுக்குழுக்களும் சோந்த இந்த இதனை செய்கின்றனர் என்பது அம்பலமாகியுள்ளது.
இவ்வண்ணமாக செய்திகள் வருகின்றபோது மாற்று கட்சிகள் தடுத்து நிறுத்தியதாக ஊடகங்கள் ஊடாக புலனாய்வு பிரிவினர் செயற்பட்டு அந்த செய்திகளை பெய்யான விதத்தில் பரப்பியிருந்தனர் அதனை செய்த ஊடகங்களை வன்மையாக கண்டிக்கின்றோம்.
ஜனாதிபதி ரணில் எதிர்வருகின்ற சுததந்திர தினத்துக்கு முன்பதாக தமிழர்களுக்கு தீர்வுதருவேன் என் அங்கு பேச்சுக்கு வாருங்கள் என்று சொல்லி விட்டு இங்கு ஆயிரக்கணக்கான எமது புனிதர்களான மாவீரர்கள் புதைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை சூறையாடுகின்ற வேலைத்திட்டத்தை மறைமுகமாக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றார்.
இவ்வாறான நிலையில் தமிழ் தேசிய நிலப்பரப்பிலே பயணிக்கின்ற தமிழ்தேசிய கட்சிகள் தமிழ் தேசிய உணர்வாளர்கள் தமிழ் தேசத்தில் மண்பற்றுள்ள அனைவரும் ஒன்று கூடவேண்டும் ஏன் என்றால் இவ்வாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் ஈனச்செயல்கள் நடந்து கொண்டிருக்கின்ற நிலையில் தமிழ் தேசிய கட்சிகள் பேச்சுவார்த்தைக்கு போவார்களாக இருந்தால் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டும்.
அதேவேளை மாவீரர் துயிலும் இல்லத்திற்கு தீர்வு கிடைத்தால்தான் பேச்சுக்கு வருவோம் அல்லது வரமாட்டோம் என பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறவேண்டும் இதனை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.
இது எங்கள் புனித மண் தமிழர்கள் வாழுகின்ற பூமி அந்த பூமியை மீட்டெக்க வேண்டிய கட்டாய கடமைகளும் பொறுப்பும் உத்தரவாதமும் எங்களுக்கு இருக்கின்றது. எனவே மாவீரர் துயிலும் இல்லத்தை மீட்பதற்கான போராடம் எதிர்வரும் 4ம் திகதி புதன்கிழமை 10 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெறும் இந்த போராட்டத்தில் தமிழ்தேசிய கட்சிகள், தமிழ் தேசிய உணர்வாளர்கள், மண்பற்றாளர்கள் சிவில் சமூகங்கள், மதகுருமார்கள், புத்திஜீவிகள், மாவீரர் குடும்பம் பெற்றார்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் என்றார்.

## தமிழர்களுடைய நிர்வாக...

அவர் மேலும் தெரிவிக்கையில், நமது யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக செல்வது எமது யாழ் மாவட்டத்திற்கு மட்டுமல்ல யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் பதவியில் இருந்த போது பதவி உயர்வு பெற்று செல்வது எமக்கு சந்தோஷத்தை ஏற்படுத்துகிறது.
நமது அரச அதிபர் பதவி உயர்வு பெற்று செல்வது சந்தோசமான விடயமாக இருந்தாலும் அவருடைய காலத்தில் மேலதிக அரசாங்க அதிபராக கடமை ஆற்றிய மை எனக்கு கிடைத்த ஒரு பாக்கியமாகவே கருதுகிறேன்.
ஏனெனில் ஒரு தந்தையிடம் பிள்ளைகளுக்கு கிடைக்கும் கண்டிப்பில்லாத அரவணைப்பு அவரிடம் காணப்பட்ட சிறந்த குணமாகும்.
நிர்வாக விடயங்களில் நேர்த்தியாகவும் அர்ப்பணிப்புத் தன்மையுடன் தனது தனிப்பட்ட சுகபோகங்களை புறந்தள்ளி மாவட்டத்திற்கு தன்னாலான பணியை ஆற்றியுள்ளார்.
மாவட்ட செயலகத்தின் கீழ் பணியாற்றும் எந்த ஒரு உத்தியோகத்தரையும் மனதளவில் கூட காயப்படுத்தி விடக் கூடாது என்ற எண்ணம் அவரை உயர் பதவிக்கு இறைவன் அனுப்பியுள்ளார்.
அவருடன் பணியாற்றிய காலம் கொரோனா இடர் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் மிகவும் சாதுரியமாக தனது நிர்வாக விடையங்களை மேற்கொள்வார்.
உத்தியோத்தர் தொடர்பில் யாராவது முறைப்பாடுகள் தெரிவித்தால் சிரித்த முகத்துடன் அவர்களுக்கு அறிவுரை கூறி இனிமேல் இவ்வாறான விடயங்கள் மீண்டும் இடம்பெறக்கூடாது என கூறி அனுப்புவார் .
ஆகவே எமது மாவட்டத்தின் அரசாங்க அதிபர் அமைச்சின் செயலாளராக சென்றமை எமது மாவட்டத்திற்கு மட்டுமல்ல மாவட்ட செயலகத்திற்கும் பெருமை என அவர் மேலும் தெரிவித்தார்.

## எந்தவொரு தரப்பிற்கும்...

“நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகம் இல்லாத வகையில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பது தான் எனது இலக்கு. தீர்வைக் காண்பதற்கான பேச்சுப் பயணம் இந்தப் புத்தாண்டில் வெற்றிகரமாக நடைபெறும் என்று நம்புகின்றேன். தீர்வு காணும் விடயத்தில் இயலாத்தன்மை வருமாயின் அதை எதிர்வரும் சுதந்திர தினத்தில் நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிப்பேன். இதை மட்டுமே என்னால் இப்போது கூற முடியும்.”
இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அரசு ஆரம்பித்துள்ள சர்வகட்சி பேச்சு தொடர்பிலும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதியிடம் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய பிரத்தியேக கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:–
”நாட்டில் இடம்பெறுகின்ற கொலைச் சம்பவங்கள், போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைத் தப்பிக்கவைக்கும் வகையில் குறிப்பிட்ட சில ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் வருவதுபோல், அரசு ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வைக் காண்பதற்கான சர்வகட்சி பேச்சு தொடர்பிலும் முரண்பட்ட தகவல்களை சில ஊடகங்கள் வெளியிடுகின்றன.
நாட்டு மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வை காணும் பயணத்தில் இப்படியான ஆரோக்கியமற்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் எனக் குறிப்பிட்ட ஊடகங்களிடம் நான் வேண்டிக்கொள்கின்றேன்.
நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகமில்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதுதான் எனது இலக்கு. இதை மட்டுமே என்னால் இப்போது கூற முடியும்.
அதிகாரப் பகிர்வு தொடர்பாக சர்வகட்சித் தலைவர்கள் தங்களுக்கு இடையில் ஒன்றுகூடி ஒரு தீர்க்கமான முடிவை விரைந்து எடுக்குமாறு கடந்த சந்திப்பில் கூறிவிட்டேன்” – என்றார்.

## தீர்வை வழங்குவது அரசின்...

தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்குவது அரசாங்கத்தின் கடப்பாடாகும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
தற்போது அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அவை வெற்றி பெற முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் என்றும் கூறினார்.
அதேநேரம், எமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யாத அர்த்தமற்ற தீர்வை ஏற்கப்போவதில்லை என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்றும் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.





# 2023 பேச்சுவார்த்தைகளின் ஆண்டா ? பேய்க்காட்டப்படும் ஆண்டா?

நிலாந்தன்

புதிய ஆண்டு பேச்சுவார்த்தைகளோடு தொடங்குகின்றது. புத்தாண்டு பிறந்த கையோடு மூன்று அல்லது நாலு நாட்களுக்கு தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் என்பதே வெளியுலகத்தை கவர்வதற்கான ஒரு ஏற்பாடுதான். அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் சீரியஸ் ஆக இருக்கிறது என்பதை காட்டுவதற்கான ஓர் உத்தி அது. அவ்வாறு காட்டவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. ஏனெனில் இப்பொழுது நடக்கும் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைத் தர வேண்டும் என்பதை விடவும், பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணை எடுக்கக்கூடிய நாடுகளை கவர்வதற்கான ஒரு ஏற்பாடுதான்.

மோதலில் ஈடுபடும் தரப்புகள் அல்லது பிணக்கிற்கு உட்பட்ட தரப்புகள் எப்பொழுது பேச்சுவார்த்தைக்கு வரும் என்றால்,அரசியல் வலுச்சமநிலை மாறும் போதுதான். அரசியல் வலுச்சமநிலையை போரின் மூலமும் மாற்றலாம். மக்கள் போராட்டங்களின் மூலமும் மாற்றலாம். தேர்தல் முடிவுகளின் மூலமும் மாற்றலாம். இலங்கைத்தீவின் வலுச்சமநிலை பொருளாதார நெருக்கடியின் விளைவாக தோன்றிய தன்னெழுச்சி போராட்டத்தின் மூலம் மாற்றப்பட்டு விட்டது. தன்னெழுச்சி போராட்டங்கள் சிங்கள பௌத்த கடுந்தேசிய வாதத்தை பதுங்க செய்துவிட்டன. சிங்கள பௌத்த கடுந்தேசியவாதமானது சிங்கள பௌத்த லிபரல் முகமூடியின் பின் மறைவெடுத்து நிற்கிறது. தாமரை மொட்டுக் கட்சி ஒற்றையானைக்கு பின் பதுங்கி நிற்கின்றது. இதனால் ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம்தான் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுவார்த்தைக்கான அழைப்புக்குக் காரணம்.

இதைத் தமிழ்த்தரப்பின் நோக்குநிலையில் இருந்து சொன்னால், பேச்சுவார்த்தைக்கான அரசியல் வலுச்சமநிலை இலங்கைத்தீவில் உருவாக காரணம் தமிழ்த்தரப்பின் போராட்டங்கள் அல்ல. தமிழ்த்தரப்பு பலமடைந்ததாலும் அல்ல. மாறாக சிங்களத்தரப்பு தனக்குள்தானே மோதி பலவீனம் அடைந்ததே காரணம். இவ்வாறு சிங்களத் தரப்பு பலவீனமடைந்ததால் இலங்கைத்தீவின் அரசியல் வலுச்சமநிலை மாற்றம் கண்டுள்ளது.இதை பயன்படுத்தி வெளிநாடுகள் இலங்கைத்தீவின் மீதான தமது பிடியை மேலும் இறுக்க முற்படும்பொழுது இத்தீவின் அரசியல், ராணுவ, பொருளாதார வலுச்சமநிலையில் மேலும் மாற்றம் வரலாம்.

உதய கம்மன்பில அதைத்தான் "பொருளாதார நெருக்கடியை பகடைக்காயாக கொண்டு நாட்டுக்கு எதிரான தீர்மானங்களை செயற்படுத்துவதாயின், 30 வருடகால யுத்தத்தை வெற்றிகொள்ளாமல் இருந்திருக்கலாம்" என்று கூறியிருக்கிறார்.

கஜேந்திரக்குமார் அதைத்தான் தமிழ் நோக்கு நிலையில் இருந்து கூறியிருக்கிறார். அதாவது பொருளாதார நெருக்கடி காரணமாக சிங்களத்தரப்பு பலவீனம் அடைந்து விட்டது, அதனால் பேச்சுவார்த்தைக்கு இறங்கி வருகிறது, எனவே தமிழ்த் தரப்பு தனது பேரத்தை பலப்படுத்த வேண்டும் என்று.

ஆனால் இது தமிழ்த்தரப்பின் போராட்டத்தாலோ அல்லது அதிகரித்த பலத்தாலோ ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம் அல்ல. இந்த வலுச்சமநிலை மாற்றத்தில் அரசாங்கத்துக்கு உதவி புரியும் நாடுகளின் அழுத்தமும் ஓரளவுக்கு உண்டு. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான உதவிகளும் இனப்பிரச்சனைக்கான தீர்வும் ஒரே பொதிக்குள் வைக்கப்பட வேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துகின்றன.அதேசமயம் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியாவின் நிலைப்பாடும் அதுவாக இருந்தது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை கண்டுபிடிக்க வேண்டும் என்ற அழுத்தம் அரசாங்கத்தின் மீது உண்டு. அதுவும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன என்று ஒரு தோற்றத்தை கட்டியெழுப்பக் காரணம். எனவே இதில் தமிழ்த்தரப்பின் பேரபலம் என்பது முதலாவதாக சிங்களத்தரப்பின் வீழ்ச்சியாகவும், இரண்டாவதாக வெளி உலகத்தின் அழுத்தமாகவும் காணப்படுகிறது.

அதனால் பேச்சுவார்த்தையை எதிர்பார்ப்போடு பார்க்கும் வெளியுலகத்திற்கு தமிழ்த்தரப்பு அதில் ஈடுபடும்–என்கேஜ்–engage–பண்ணும் என்ற செய்தி கொடுக்கப்பட வேண்டும். இதன்பொருள் மேற்கு நாடுகள் ஒரு தீர்வை பெற்று தரும் என்பதல்ல. மாறாக, நவீன ராஜதந்திரவியல் எனப்படுவது என்கேஜ்மென்ட்தான். இந்த அடிப்படையில், ஒரு தரப்பாக சிந்தித்தால், ஒரு தேசமாக சிந்தித்தால், பேச்சுவார்த்தையில் என்கேஜ் பண்ண வேண்டும். தவிர தமிழ்த்தரப்பிடம் நாட்டில் சொந்தமாகப் பலம் எதுவும் கிடையாது. அந்த பலத்தின் காரணமாக வலுச்சமநிலை மாறவும் இல்லை. எனவே தன் பலம் எதுவென்று கண்டு தமிழ்த்தரப்பு பேச்சில் ஈடுபட வேண்டும். அதன்பொருள் பேச்சுவார்த்தையை இதயபூர்வமாக நம்ப வேண்டும் என்பதல்ல. இதுவிடயத்தில் "என்கேஜ் அண்ட் எக்ஸ்போஸ்" அதாவது ஈடுபட்டு அதை அம்பலப்படுத்துவது என்ற ஒரு தந்திரத்தை தமிழ்த்தரப்பு கடைப்பிடிக்க வேண்டும்.

சிங்களபௌத்த பெருந்தேசியவாதத்தின் கடும்போக்குவாதிகள் லிபரல் முகமூடி அணிந்த ஒற்றை யானைக்கு பின் பதுங்குகிறார்கள்.அவர்களுக்கு உலக அங்கீகாரத்தை பெறுவதற்கு அந்த ஒற்றை யானைய ஏற்பாடு செய்யும் பேச்சுவார்த்தை என்ற தோற்றமாயை தேவை. எனவே அதைப் பயன்படுத்தி பதுங்கியிருக்கும் சிங்களபௌத்த பெருந்தேசியவாதத்தின் கடும்போக்காளர்களை ஒரு தீர்வை நோக்கி வளைத்தெடுக்கலாம் என்று மேற்கு நாடுகள் நம்பக்கூடும்.

அந்த நம்பிக்கை தமிழ் மக்களின் சுமார் ஒரு நூற்றாண்டு கால அனுபவத்துக்கு பொருந்தி வரவில்லை என்பதனை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு தமிழ்த்தரப்புக்கு உண்டு. எனவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு எதிர்த்தரப்பை அம்பலப்படுத்த வேண்டும். அதுதான் இப்பொழுது உயர்ந்திருக்கும் தமிழ் தரப்பின் பேரத்தை தொடர்ந்து உயர்வாக வைத்திருக்க உதவும்.

பன்னாட்டு நாணயநிதியத்தின் உதவிகள் எதிர்பார்த்த வேகத்தில் கிடைக்கவில்லை. மேலும் அந்த உதவிகள் கடனை அடைக்க போதுமானவை அல்ல. ஆனால் அந்த உதவிகள் கிடைத்தால் ஏனைய நாடுகளிடம் உதவி பெறத் தேவையான அங்கீகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடும். எனவே அந்த அங்கீகாரத்தை நோக்கி உழைக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. இந்த அடிப்படையில் பார்த்தால் அரசாங்கம் மேற்குநாடுகளை சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

அதனால் ரணில் விக்கிரமசிங்க முன்பு 2015இல் இருந்து 2018வரையிலும் முன்னெடுத்த நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை ஒரு புதிய வடிவத்தில் முன்னெடுக்க முயற்சிப்பதாக தெரிகிறது. தென்னாபிரிக்கப் பாணியிலான நல்லிணக்கப் பொறிமுறை என்ற உரையாடல் அதைத்தான் குறிக்கிறது. ஆனால் நிலைமாறுகால நீதி என்பது இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் ஓர் அழகிய பொய்யாகிவிட்டது. ரணிலோடு நிலைமாறுகால நீதியின் பங்காளியாகச் செய்யப்பட்ட கூட்டமைப்பின் பேச்சாளர் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வவுனியாவில் வைத்துச் சொன்னார். "6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையை முயற்சி செய்தோம். அதில் தோற்றுவிட்டோம்." என்று.அவ்வாறு ஏற்கனவே இந்த நாடு பரிசோதித்து தோல்வி கண்ட ஒரு விடயத்தை மீண்டும் ரணில் விக்கிரமசிங்க கையில் எடுக்கப் போகிறாரா ?

முன்னைய நிலைமாறுகால நீதிச் செய்முறைகளின்போது கூட்டமைப்பு அரசாங்கத்தோடு இணைந்து யாப்புருவாக்க முயற்சிகளில் ஈடுபட்டது. ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அமர்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா கூறிய வார்த்தைகளை இங்கே தமிழ்த்தரப்பு மீட்டுப் பார்க்க வேண்டும். "சம்பந்தரின் காலத்திலேயே ஒரு தீர்வைக் காண வேண்டும். அவரைப் போல விட்டுக்கொடுக்கும் ஒரு தமிழ்த் தலைவர் இனி வரமாட்டார்" என்று டிலான் தெரிவித்திருந்தார். அது உண்மை. ஏனென்றால் அந்தளவுக்கு சம்பந்தர் விட்டுக் கொடுத்தார். பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் தீர்வு என்று சம்பந்தர் காயத்திரி மந்திரம் போல திரும்பத்திரும்பச் சொன்னார். ஆனால் அது எதுவுமே மகிந்த அணியை சமாதானப்படுத்தவில்லை. அவர்கள் யாப்புருவாக்க முயற்சியை இடைக்கால வரைபோடு குழப்பினார்கள்.

இப்பொழுது மறுபடியும் சம்பந்தர் விட்டுக்கொடுக்கப் போகிறாரா இல்லையா என்பதனை தமிழ் மக்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டிலான் வழங்கிய பாராட்டு பத்திரத்தை விடவும் தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் சம்பந்தருக்கு வழங்கிய தண்டனை பெரியது.

எனவே கூட்டமைப்பு இம்முறை ஏனைய கட்சிகளோடு இணைந்து திட்டவட்டமாக சில முடிவுகளை எடுக்கவேண்டும். முதலாவதாக பேச்சுவார்த்தைக்கான கட்டமைப்பை மறுகட்டமைப்பை செய்ய வேண்டும் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது சர்வகட்சி மாநாடு. அது வெளித்தோற்றத்திற்கு எல்லாக் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்கும் ஒரு ஜனநாயக ஏற்பாடாக தோன்றலாம். ஆனால் கடந்த 75 ஆண்டுகால அனுபவம் என்னவென்றால், இனப் பிரச்சினைக்கான தீர்வு பொறுத்து எல்லா சர்வகட்சி மாநாடுகளும் ஏமாற்றுவித்தைகளே. எனவே பேச்சுவார்த்தைகளை பிணக்குக்கு உட்பட்ட தரப்புகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளாக மாற்ற வேண்டும். அதன்படி தமிழ்த்தரப்பு சிங்களத் தரப்புடனும் முஸ்லிம் தரப்புடனும் பேச வேண்டும். அரசாங்கமே சிங்களத் தரப்பை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும். எல்லா கட்சிகளையும் கூட்டிக்கொண்டு வந்து சர்வகட்சி மாநாடு என்று சொல்லி குழப்பியடிக்க முடியாது. சிங்களக் கட்சிகளை சமாளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியது. அரசாங்கத்தோடு நிற்கும் தமிழ்க் கட்சிகளையும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசு தரப்பாகவே பார்க்க வேண்டும். இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறு கட்டமைப்பு செய்ய வேண்டும்.

அடுத்த கட்டமாக மூன்றாவது தரப்பை உள்ளே கொண்டு வர வேண்டும். இந்தியாவும் உட்பட மேற்கு நாடுகளை இணைத்தலைமை நாடுகளாக உள்ளே இறக்க வேண்டும். அண்மையில் முன்னாள் சமாதான தூதுவரான எரிக் சொல் ஹெய்ம் கூறியிருக்கிறார். மூன்றாவது தரப்பு தேவையில்லை என்று. அது அவருடைய தனிப்பட்ட அபிப்பிராயம். அதுவே தமிழ்தரப்பின் அபிப்பிராயமாக இருக்கத் தேவையில்லை.

இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறுக்கட்டமைப்பு செய்துவிட்டு பேசத் தொடங்கலாம். ரணில் விக்கிரமசிங்க தயாரிக்கும் நாடகத்தில் பங்காளிகளாக இணைவதா அல்லது தமது மக்களுக்கு விசுவாசமாக இருப்பதா என்பதை தமிழ் கட்சிகள் தீர்மானிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. போன தடவை நிலைமாறுகால நீதியின் பங்காளிகளாக மாறப் போய் ஆறு ஆசனங்களை இழந்த கூட்டமைப்பு இனிமேலும் "பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத இலங்கைத் தீவுக்குள்" என்று உச்சாடனம் செய்யத் தேவையில்லை. டிலான் பெரேராக்களின் பாராட்டுப் பத்திரமா? அல்லது அல்லது தமது சொந்த மக்களின் தோல்வியா? என்பதனை தீர்மானிக்க வேண்டிய ஆண்டு இது.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல 527 காங்கேசன்துறை சாலையிலுள்ள அகரவ் பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி வெளியிடப்பட்டது.